# ஆயக்குடி மரத்தடி மையம்

## TNPSC GROUP I, II & IV, TET, SI, POLICE

நாள் : 02-06-2024 நேரம் : காலை 10.00 மணி

இடம் : காவல் நிலையம், நந்தவன மரத்தடி, பழைய ஆயக்குடி,



**இந்த வாரத்திற்கான (02.06.2024) (PDF) வழங்குபவர்கள்,**
**நமது மாணவரும், சிவகங்கை மாவட்ட, சுகாதாரத்துறை உதவியாளருமான,**

திரு. **ஆர்.சண்முகபாண்டி** அவர்களுக்கும்

**நமது மாணவரும், பழனி ஊராட்சி ஒன்றிய இளநிலை உதவியாளருமான,**

திரு. **R.பிரபு** அவர்களுக்கும்

**நமது மரத்தடி மாணவியும், காங்கேயம், பூமாண்டன்வலசு கிராம நிர்வாக அலுவலருமான,**

திருமதி. **பெ.காளீஸ்வரி** அவர்களுக்கும்,

**ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையத்தின்**
சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## குரூப் - 4 தேர்வில் பெற வாழ்த்துகிறோம் ...
## குரூப் - 4 மாதிரித்தேர்வு - 7

**வினாக்களை முழுமையாக படித்த பின்பு விடையளிப்பீர் !**
**நன்கு தெரிந்த வினாக்களில் தவறுகளை தவிர்ப்பீர் !!**

தொடர்புக்கு ...

**P.ராமமூர்த்தி** B.E., (Agri) M.B.A., ☎: 94863 01705
**A.விக்ரமன்** M.Sc., ☎: 98949 52582

# மாதிரித்தேர்வு - 6

## தமிழ்

1. சரியான இணை எது?
1. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு.-உவமையணி
2. புறந்தூய்மைநீரா னமையும் அகத்தூய்மை வாய்மையாற் காணப் படும் - எடுத்துக்காட்டு உவமையணி
3. இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர் வைங்கூழ் சிறுகாலைச் செய் - உருவகஅணி
4. அன்பத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளித் தற்று - குறள் 78 - இல்பொருள் உவமையணி
a. 1, 2 மட்டும் b. 3, 4 மட்டும்
c. 2, 3, 4 மட்டும் d. அனைத்தும்

2. சரியான இணை எது?
1. உரைமுடிவு காணான் இளையோன் என்ற நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச் சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை கல்லாமல் பாகம் படும் - வேற்றுப்பொருள் வைப்பணி
2. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார். - ஏகதேச உருவக அணி
3. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. - நிரல்நிறை அணி
4. இருட்பகை இரவி இருளெனத் தம்மையும் கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக் கையாண் மார்பிற் புடைத்துக் கலங்கி மெய்யாத் தம்பெயர் விளம்பி வாயசம் பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும் - தற்குறிப்பேற்ற அணி
a. 1, 2, 3 மட்டும் b. 3, 4 மட்டும் c. 2, 3, 4 மட்டும்d. அனைத்தும்

3. பொருத்துக?

| சீர் | வாய்ப்பாடு |
|---|---|
| a. நேர் நேர் | - 1. புளிமா |
| b. நிரைநேர் | - 2. தேமா |
| c. நிரைநிரை | - 3. கூவிளம் |
| d. நேர் நிரை | - 4. கருவிளம் |

4. பின்வருநிலையணி ----- வகைப்படும்?
a. 2 b. 3 c. 4 d. 5

5. இரும்புக் கடலை என்ற அடைமொழி கொண்ட நூல்?
a. பெரியபுராணம் b. சிலப்பதிகாரம்
c. சீவகசிந்தாமணி d. பதிற்றுப்பத்து

6. தமிழின் முதல் தத்துவ நூல்?
a. தொல்காப்பியம் b. திருக்குறள்
c. திருப்பாவை d. திருமந்திரம்

7. நாளங்காடி மற்றும் அல்லங்காடி பற்றிக் குறிப்பிடும் நூல்கள்?
1. பட்டினப்பாலை, 2. மதுரைக்காஞ்சி,
3. மூதுரை, 4. முதுமொழிக்காஞ்சி
a. 1, 2 b. 3, 4 மட்டும்
c. அனைத்தும் d. எதுவுமில்லை

8. பிராமி எழுத்துக்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டு?
a. கழுகுமலை கல்வெட்டு
b. திருக்கோவிலூர் கல்வெட்டு
c. திருப்பரங்குன்றம் கல்வெட்டு
d. குடுமியான்மலை கல்வெட்டு

9. சரியான இணை எது?

| எண்ணுப்பெயர் | தமிழெண் |
|---|---|
| a. எண்பத்திரண்டு | - அஉ |
| b. தொண்ணூற்றொன்பது | - கூகூ |
| c. இருபத்தைந்து | - உரு |
| d. பதினைந்து | - கள |

10. பொருந்தா இணை எது?
1. சிறுபஞ்சமூலம் - காரியாசன்
2. ஞானரதம் - பாரதியார்
3. எழுத்து - சி.க.செல்லப்பா
4. குயில்பாட்டு - கண்ணதாசன்
a. 4 B. 1 C. 3 D. 2

11. உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்ற கொள்கையை உயிர் மூச்சாய் பெற்றவர்?
a. பாரதியார் b. பாரதிதாசன்
c. கவிமணி d. வைரமுத்து

12. பாரதிதாசன் ‘சுப்புரத்தினம் ஓர் கவி’ என அறிமுகம் செய்தவர்?
a. தேசியகவி b. காந்தியகவி
c. ஆறுமுக நாவலர்
d. பரிதிமாற்கலைஞர்

13. ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்ட ஆண்டு?
a. 1908 b. 1900
c. 1886 d. 1890

14. ஆறுமுக நாவலரை ‘வசன நடை கைவந்த வல்லாளர்’ எனப் பாராட்டியவர்?
a. வீரமாமுனிவர்

b. குணங்குடி மஸ்தான் சாகிபு
c. பரிமேலர் d. பரிதிமாற் கலைஞர்

15. வீரமாமுனிவர் எழுதிய நகைச்சுவை நூல்?
a. தேம்பாவணி
b. தொன்னூல் விளக்கம்
c. அம்மானை d. பரமார்த்த குரு கதை

16. நிறை நீர நீரவர் கேண்மை - என்ற குறளில் அமைந்துள்ள தொழிற்பெயர்
a. நிறை b. நீரவர்
c. கேண்மை d. நீர

17. பொருத்துக?
a. பேதையார் நட்பு - 1.தேய்பிறை போன்றது
b. பண்புடையார் தொடர்பு - 2. நவில் தொறும் நூல் நயம் போன்றது
c. அறிவுடையார் நட்பு - 3. வளர்பிறை போன்றது
d. இருக்கண்களையும் கட்டி - 4. உடுக்கை இழந்தவர் கை போன்றது

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 1 | 2 | 3 | 4 |
| b | 1 | 2 | 4 | 3 |
| c | 4 | 3 | 2 | 1 |
| d | 4 | 2 | 1 | 3 |

18. தென்னாட்டின் ஜான்சி ராணி என அழைக்கப்படுபவர்?
a.அம்புஜத்தம்மாள்
b. அஞ்சலையம்மாள்
c. வேலுநாச்சியார்
d. ஜான்சிராணி

19. நான் கண்ட பாரதம் - என்னும் நூலை இயற்றியவர்?
a. பாரதியார் b. வ.உ.சி.
c. அம்புஜத்தம்மாள்
d. அஞ்சலையம்மாள்

20. பொருத்துக?
a. உ+ச - 1. 6
b. அ+உ - 2. 10
c. கO + உ - 3. 12
d. கஅ + க - 4. 19
a) 1 2 3 4 b) 1 3 4 2
c) 4 3 2 1 d) 3 2 1 4

21. கம்பராமாயணத்தில் அமைந்துள்ள காண்டங்களின் எண்ணிக்கை?
a. 5 b. 6 c. 4 d. 3

22. விகார புணர்ச்சி-----வகைப்படும்?
a. ஐந்து b. ஆறு c. மூன்று d. இரண்டு

23. தமிழக அரசின் பரிசு பெற்ற முடியரசனின் காவியம்?
a. வீரகாவியம் b. காவியப்பாவை
c. பூங்கொடி d. எதுவுமில்லை

24. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு - இக்குறளில் அமைந்துள்ள அணி?
a. உவமையணி b. உருவகஅணி
c. எடுத்துக்காட்டு உவமையணி
d. இல்பொருள் உவமையணி

25. வேறுபட்டது எது?
a. புற்கை b. மூரல்
c. மடை d. கழி

26. பாவின் வகைகள் மொத்தம்?
a. 4 b. 5 c. 3 d. 2

27. உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மேல் ஏற்றி கூறுவது_______அணி?
a. உவமையணி b. உருவகஅணி
c. இயல்பு நவிற்சி அணி
d. எடுத்துக்காட்டு உவமையணி

28. அஞ்சலை அரக்க! யார்விட்டந்தர மடைந்தானன்றே வெஞ்சின வாலி, மீளான், வாலும் போய் வீழ்ந்ததன்றே.... இவ்வடிகள், எதில் அமைந்துள்ளது?
a. திருக்குறள் b. சிலப்பதிகாரம்
c. கம்பராமாயணம் d. புறநானூறு

29. வேறுபட்டது எது?
a. அம்மானை b. ஊசல்
c. சிற்றில் d. கழங்கு

30. மன்னிப்பு இச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்?
a. காத்தல் b. பொறுத்தல்
c. விட்டுவிடுதல் d. மறத்தல்

31. தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர்?
a. தேவநேயப்பாவாணர்
b. குமரகுருபரர்
c. பாரதியார் d. பாரதிதாசன்

32. மண்ணிலே விண் - ஆசிரியர்?
a. உமறுபுலவர் b. பரிதிமாற்கலைஞர்
c.பாரதிராசா d.தேவநேயப்பாவாணர்

33. ‘பவளவாய் பேசினாள்’ - இலக்கணக் குறிப்பு?
a. வினைத்தொகை b. உவமை தொகை
c. உம்மை தொகை
d. அன்மொழி தொகை

34. அறம் - எதிர்ச்சொல்?
a. மரம் b. மறம்
c. புறம் d. குறம்

35. 15 என்பதன் எண்ணுரு?

a. கஉ b. கரு
c. கங d. கக

36. உள்ளங்கை - பிரித்தெழுது?
a. உள்+அம்+கை b. உள்ளம் + கை
c. உள்+ம்+கை d. உள்ளம்+அம்+கை

37. நாகு என்பதன் பொருள்?
a. குதிரை b. பாம்பு
c. பன்றி d. பசு

38. சார்பு என்பது எவ்வகை குற்றியலுகர வகை?
a. வன் தொடர் b. மென் தொடர்
c. இடைத்தொடர் d. உயிர்த்தொடர்

39. வில்லி பாரதம் எத்தனை பருவங்களை கொண்டது?
a. 6 b. 8 c. 10 d. 12

40. பகழி பொருள் தருக?
a. அம்பு b. கோடாரி
c. கடப்பாரை d. மண்வெட்டி

41. தவறான கூற்று எது?
1. கம்பர் பிறந்த ஊர் - தேரழுந்தூர்
2. கம்பரை ஆதரித்த வள்ளல் சடையப்ப வள்ளல்.
3. கம்பராமாயணத்தில் அமைந்துள்ள காண்டங்களின் எண்ணிக்கை - 6.
4. கம்பராமாயணம் வழிநூல் எனப்படுகிறது.
a) 1, 2, 3 b) 2, 3, 4
c) 1, 3, 4 d) எதுவும் இல்லை

42. தந்தை பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளை கவிதை வடிவில் தந்தவர்?
a) அண்ணா b) கலைஞர்
c) கண்ணதாசன் d) பாவேந்தர்

43. தமிழ் நாடகத் தந்தை என அழைக்கப்படுபவர்?
a) சங்கரதாசசுவாமிகள்
b) பம்மல் சம்மந்தனார்
c) தி.க.சண்முகனார் d) மனோகரன்

44. தவறான கூற்று எது?
1. தேம்பாவணி நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர்.
2. வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி.
3. வீராமாமுனிவர் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர்.
4. 'தொன்னூல் விளக்கம்' ஆசிரியர் திருமூலர் ஆவார்.
a) 1, 2 b) 2, 3 c) 4 d) அனைத்தும்

45. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
a) 6 b) 4 c) 10 d) 8

46. சரியான கூற்று எது?
1. திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
2. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜி.யு.போப்.
3. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் திருவள்ளுவமாலை.
4. திருக்குறள் உலகப்பொதுமறை எனப்படுகிறது.
a) 1, 2, 3 b) 2, 3, 4
c) 1, 3, 4 d) அனைத்தும்

47. வழக்கு எத்தனை வகைப்படும்?
a) 3 b) 2 c) 4 d) 5

48. சரியான கூற்று எது?
1. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு கணினி.
2. 'கணினி'யின் தந்தை சார்லஸ் பாபேஜ்
3. இணையம் என்ற வடிவத்திற்கு வித்திட்டவர் ஜான்பாஸ்டல்.
4. தமிழ் எழுத்துக்களை எழுதவும், ஒலிக்கவும் கற்றுத்தரும் இணையதளம் தமிழ்ம்.
a) 1, 2, 3 b) 2, 3, 4
c) 1, 3, 4 d) அனைத்தும்

49. தஞ்சை, கோவை, குடந்தை என்பது?
a) மரூஉ b) இலக்கணப்போலி c) குழுஉக்குறி d) ஊர்கள்

50. 'சம்பு' என்பது?
a) கொய்யாப்பழம் b) நாவற்பழம்
c) வாழைப்பழம் d) பலாப்பழம்

51. 'தென்னாட்டின் ஜான்சி ராணி'?
a) அம்புஜத்தம்மாள் b) அஞ்சலையம்மாள்
c) அசலாம்பிகா d) வேலுநாச்சியார்

52. 'நாலிரண்டு' இலக்கணக்குறிப்பு?
a) வினைத்தொகை
b) உவமைத்தொகை
c) உம்மைத்தொகை
d) அன்மொழித்தொகை

53. வேற்றுமை .................. வகைப்படும்?
a) எண் b) ஏழு
c) மூன்று d) நான்கு

54. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என பாடியவர்?
a) குணங்குடிமஸ்தான்
b) கணியன்பூங்குன்றனார்
c) மோடி d) பாரதியார்

55. தமிழ் சிற்றிலக்கியங்கள் ............... வகைப்படும்?
a) 90 b) 96 c) 92 d) 99

56. "அமர்" என்பதன் பொருள்?
a) யானை b) போர்
c) வெற்றி d) இறப்பு

57. ‘‘அளகு’’ என்பதன் பொருள்?
a) கோழி b) சேவல்
c) ஆடு d) மாடு

58. ‘திருவள்ளுவமாலை’ எனும் தனி நூலின் ஆசிரியர்?
a) திருவள்ளுவர் b) திருமூலர்
c) கபிலர் d) ஔவையார்

59. பொருத்துக :
a. விசும்பு - 1. வானம்
b. அரவு - 2. பாம்பு
c. மேதி - 3. எருமை
d. தார் - 4. மாலை
a) 1 2 3 4 b) 4 2 3 1
c) 4 3 2 1 d) 3 2 4 1

60. புகழேந்தி புலவரை ஆதரித்த வள்ளல்?
a) சடையப்ப வள்ளல் b) சந்திரன் சுவர்க்கி
c) பேகன் d) பாரி

61. முடியரசன் பிறந்த ஊர்................?
a) பெரியகுளம் b) காஞ்சிபுரம்
c) திருச்சி d) போடி

62. பிள்ளைத்தமிழிலுள்ள பருவங்களின் எண்ணிக்கை?
a) 10 b) 15 c) 3 d) 6

63. ‘இனியவை நாற்பது’ நூலின் ஆசிரியர்?
a) பூதஞ்சேந்தனார் b) சேக்கிழார்
c) கவிமணி d) சச்சிதானந்தன்

64. தவறாக பொருந்தியுள்ளதை கண்டறிக?
A) பசிப்பிணி என்னும் பாவி-மணிமேகலை
B) உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே - புறநானூறு, மணிமேகலை
C) மருந்தென வேண்டாவாம் - திரிகடுகம்
D) அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு - பழமொழி

65. தில்லையாடி வள்ளியம்மை பிறந்த ஊர் எது?
A) தில்லையாடி
B) நாகபட்டினம்
C) தென்அமெரிக்கா
D) தென் ஆப்பிரிக்கா

66. தவறாக பொருந்தியுள்ளது எது?
A) தென்திராவிட மொழிகள் - 9
B) நடுத்திராவிட மொழிகள் - 12
C) வட திராவிட மொழிகள் - 3
D) திராவிட பெருமொழிகள் - 4

67. கவியரசு கண்ணதாசன் தொடங்காத இதழ் எது?
A) தென்றல் B) முல்லை
C) மல்லிகை D) கடிதம்

68. மதுரை தமிழ்ச்சங்கத்தை?
1. தமிழ்கெழு கூடல் என்று புறநானூறு கூறுகிறது
2. தமிழ்வேலி என்று பரிபாடல் கூறுகிறது
A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி
C) 1, 2 இரண்டும் தவறு
D) 1, 2 இரண்டும் சரி

69. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடம் இடம் பெறும் நூல்?
A) தேவாரம் B) திருவாசகம்
C) திருக்குறள் D) திருப்பாவை

70. தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில்__________, __________ ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன?
A) 1976 மற்றும் 2003
B) 1876 மற்றும் 2003
C) 1786 மற்றும் 2003
D) 2003 மற்றும் 1886

71. எது சரியாக பொருந்தியுள்ளது?
1. முந்நீர் வழக்கம் - தொல்காப்பியம்
2. கலம்செய்கம்மியர் - புறநானூறு
3. விளைந்து முதிர்ந்த விழுமுத்து மதுரைக்காஞ்சி
4. பொன்னுக்கு மிளகு - அகநானூறு
A) 1, 2 B) 2, 3
C) 1, 2, 3 D) 1, 2, 3 மற்றும் 4

72. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி என தமிழின் தொன்மையைக் கூறும் நூல்?
A) அகநானூறு B) தொல்காப்பியம்
C) புறப்பொருள் வெண்பாமாலை
D) புறநானூறு

73. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ள நாடுகள்?
1. இலங்கை 2. சிங்கப்பூர்
3. மலேசியா 4. லண்டன்
A) 1 மட்டும் சரி B) 1 மற்றும் 2 சரி
C) 1, 2, 3 மட்டும் சரி
D) அனைத்தும் சரி

74. தான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன் என்றவர்?
A) கண்ணதாசன் B) பாரதியார்
C) பாரதிதாசன் D) திரு.வி.க.

75. இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியவர்?
A) வீரமாமுனிவர் B) ஜி.யு.போப்
C) குனங்குடி மஸ்தான் D) எவருமில்லை

76. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்தி போராடிய முதல் பெண்மணி?
A) ஜான்சிராணி B) ஜோத்பாய்
C) வேலுநாச்சியார் D) இந்திரா காந்தி

77. 1. தென்னாட்டின் ஜான்சிராணி - அஞ்சலையம்மாள்
2. காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் - அம்புஜத்தம்மாள்
A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் 2ரி
C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

78. நமது நாட்டில்?
1. பதினேழு வனவிலங்கு பாதுகாப்பு இடங்கள் உள்ளன
2. 66 தேசிய வனவிலங்கு பூங்காக்கள் உள்ளன
3. 368 புகலிடங்கள் உள்ளன
4. வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம் 1972-ல் இயற்றப்பட்டது
A) 1, 2 சரி B) 1, 2, 3 சரி
C) 1, 2, 4 சரி D) அனைத்தும் சரி

79. எள்ளல், இளமை, அறியாமை, மடமை ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்கிறது?
A) திருக்குறள் B) தொல்காப்பியம்
C) நாலடியார் D) பழமொழி

80. 1. நாஞ்சில் நாட்டுக் கவிஞர் கவிமணி தேசிய விநாயகனார்
2. இவரது நகைச்சுவைக் களஞ்சியம் மனோன்மணியம்
A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

81. தவறாக பொருந்தியுள்ளதை கண்டறிக?
A) மதங்க சூளாமணி - காசி விசுவநாதர்
B) மனோன்மணியம் - சுந்தரனார்
C) தமிழ் நாடகத்தந்தை - பம்பல் சம்பந்தனார்
D) தமிழ்நாடக தலைமையாசிரியர் - சங்கரதாஸ்சுவாமிகள்

82. தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத் தோங்கவும் செய்யும் என்று கூறியவர்?
A) ஜி.யு.போப் B) கால்டுவெல்
C) வ.உ.சி D) உ.வே.சா

83. யார் இவர்?
1. உ.வே.சா வின் ஆசிரியர்
2. கோவில்களைப் பற்றி தலபுராணங்கள் இயற்றியவர்
3. நோய்க்கு மருந்து இலக்கியம் என்றவர்
4. திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த எண்ணெய்க் கிராமத்தில் 1815-ல்பிறந்தவர்
A) குலாம்காதர் நாவலர் B) சவரிராயலு
C) கவிமணி D) மீனாட்சி சுந்தரனார்

84. உ.வே.சா. பதிப்பித்த வெண்பா நூல்கள்?
A) 2 B) 3 C) 13 D) 12

85. தேசியம் காத்த செம்மல் என்று முத்துராமலிங்கரை பாராட்டியவர் யார்?
A) திரு.வி.க B) கவிமணி
C) பெரியார் D) காந்தி

86. தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் இருகண்களாக போற்றியவர்?
A) விவேகானந்தர்
B) இராமலிங்க அடிகளார் C) காந்தி
D) முத்துராமலிங்கம்

87. பயிற்று மொழியை குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பது அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதைப் போன்றது என்றவர்?
A) கால்டுவெல் B) தேவநேயப்பாவணர்
C) நேரு D) காந்தி

88. தூங்கா நகர், திருவிழா நகர், கோவில் மாநகர், கூடல்நகர், தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்றெல்லாம் அழைக்கப்படும் பெருநகர்?
A) தஞ்சாவூர் B) காஞ்சிபுரம்
C) திருச்சிராப்பள்ளி D) மதுரை

89. பொருத்துக?
1) நெல் - a) நண்டோட
2) கரும்பு - b) ஏரோட
3) வாழை - c) வண்டியோட
4) தென்னை - d) தேரோட
a) 1 2 3 4 b) 1 2 4 3
c) 2 1 3 4 d) 3 4 2 1

90. தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப்பொருள் இருந்ததாக கூறும் நூல்கள்?
A) நற்றிணை, குறுந்தொகை
B) அகநானூறு, குறுந்தொகை
C) புறநானூறு, குறுந்தொகை
D) பரிபாடல், குறுந்தொகை

91. புது நெறி கண்ட புலவர் என இராமலிங்க அடிகளாரை போற்றியவர் யார்?
A) பாரதியார் B) பாரதிதாசன்
C) சுரதா D) வண்ணதாசன்

92. ஒருபைசாத் தமிழன் என்ற இதழை வெளியிட்டவர்?
A) ஆல்காட் B) வ.உ.சி. C) உ.வே.சா
D) காத்தவராயன் & அயோத்திதாச பண்டிதர்

93. ஆறுமுக நாவலரை வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பாராட்டியவர்?
A) பரிதிமாற்கலைஞர் B) வ.வே.க.
C) வீரமாமுனிவர் D) ஆறுமுகநாவலர்

94. யார்காப்பார் என்று தமிழன்னை ஏங்கியபோது நான் காப்பேன் என்று எழுந்தவர்?
A) ஜி.யு.போப் B) வ.உ.சி.
C) உ.வே.சா. D) மு.வ

95. பூக்களில் சிறந்த பூ பருத்திப்பூ என்று

கூறியவர்?
A) திரு.வி.க. B) வ.உ.சி.
C) உ.வே.ச. D) மு.வ.

96. தமிழகத்தில் அன்னிபெசன்ட் என அறிஞர் அண்ணாவால் அழைக்கப்பட்டவர்?
A) அம்புஜத்தம்மாள்-காந்திமகள்
B) அஞ்சலையம்மாள்-ஜான்சிராணி
C) இராமாமிர்தம் அம்மையார்
D) டாக்டர். முத்துலட்சுமி அம்மையார்

98. கீழ்க்கண்டவற்றுள் கடலைக் குறிக்கும் சொல் எது?
A) வங்கம் B) படகு
C) திமில் D) பௌவம்

99. தவறாக பொருந்தியுள்ளது எது?
A) வினையே ஆடவர்க்குயிர் - நற்றிணை (குறுந்தொகை)
B) முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை - தொல்காப்பியம்
C) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் - நாமக்கல் கவிஞர்
D) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - திருமூலர்

100. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை?
A) ஆடம்பரம், வீண்செலவு
B) எளிமை, சிக்கணம்
C) அன்பு, அருள்
D) கோபம், பாசம்

# G.K.

101. தமிழ்நாட்டில் ''ஸ்லேட்டர் கிராமம்'' எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
a) சென்னை b) திருவண்ணாமலை
b) விழுப்புரம் d) திருவள்ளூர்

102. தேசிய வாக்காளர் தினம்?
a) ஜனவரி 26 b) ஆகஸ்ட் 15
b) ஜனவரி 15 d) ஜனவரி 25

103. ''அழுத்த குழு'' என்ற சொல் உருவாக்கிய நாடு?
a) இங்கிலாந்து
b) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
c) இந்தியா d) ரஷ்யா

104. குடவோலை முறையை பின்பற்றியவர்கள்?
a) சேரர்கள் b) பாண்டியர்கள்
c) சோழர்கள் d) களப்பிரர்கள்

105. நில் ! விழு ! உருள் ! என்பது?
a) தீ b) நிலநடுக்கம்
c) சுனாமி d) கலவரம்

106. மக்கள் தொகை கொள்கையை முதன் முதலில் அறிவித்த நாடு?
a) சீனா b) இந்தியா
c) ரஷ்யா d) அமெரிக்கா

107. முல்லை பெரியார் அணையால் பயன் பெறாத மாவட்டம்?
a) தேனி b) சிவகங்கை
c) இராமநாதபுரம் d) தூத்துக்குடி

108. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்?
a) கிரஹாம்பெல் b) மார்க்கோணி
c) எலி விட்னி d) ஜான்கே

109. 'பசிபிக் பெருங்கடல்' என பெயரிட்டவர்?
a) கொலம்பஸ் b) வெஸ்புகி
c) மெகெல்லன் d) வாஸ்கோடகாமா

110. மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர்?
a) தனநந்தர் b) சந்திரகுப்தர்
c) சிஅநாகர் d) அஜாதசத்ரு

111. ஹரப்பா மக்கள் அறியாதவை?
a) குதிரை, இரும்பு b) தங்கம், யானை
c) ஆடு, வெள்ளி d) எருது, பிளாட்டினம்

112. பின்வருவனவற்றுள் எது 'மருந்துகளின் அரசி' என அழைக்கப்படுகிறது?
a) கேஃப்பீன் b) பெனிசிலின்
c) ஆஸ்பிரின் d) ஸ்ட்ரெப்டோமைசின்

113. இரத்தம் உறைதலைக் கண்டறிய பயன்படுத்தப்படும் கதிரியக்க ஐசோடோப் ............. ஆகும்?
a) $Mg^{24}$ b) $Na^{24}$ c) $Ca^{40}$ d) $Cl^{37}$

114. பொருத்துக :
a) ஐசோடோப் - ${}_{14}Si^{30}$, ${}_{15}P^{31}$
b) ஐசோபார் - ${}_{17}Cl^{35}$, ${}_{17}Cl^{37}$
c) ஐசோடோன் - ${}_{35}Br^{80}$, ${}_{27}Co^{60}$
d) அஜாதசத்ரு - ${}_{18}Ar^{40}$, ${}_{19}K^{400}$
a) 2, 1, 4, 3 b) 4, 3, 1, 2
c) 2, 4, 1, 3 d) 3, 1, 4, 2

115. கீழ்க்கண்டவற்றுள் எது பதங்கமாகாத பொருள்?
a) நாப்தலீன் b) பென்சாயிக் அமிலம்
c) கேம்பர் (சூடம்) d) அயோடின்

116. ரிபோஃப்ளேவின் என்பது எந்த வைட்டமினின் மற்றோர் பெயர் ஆகும்?
a) வைட்டமின் $B_1$ b) வைட்டமின் $B_2$
c) வைட்டமின் $B_6$ d) வைட்டமின் C

117. அரிசி எந்த வைட்டமினின் நல்ல ஆதாரம்?
a) வைட்டமின் A b) வைட்டமின் B
c) வைட்டமின் C d) வைட்டமின் K

118. சரியான இணை எது?
1. பிரார்த்தனை சமாஜம் - ஆத்மராம் பாண்டுரங்
2. ஆரிய சமாஜம் - தயானந்த சரஸ்வதி
3. பிரம்ம சமாஜம் - ராஜாராம் மோகன்ராய்
4. தியாசாபில் சங்கம் - மேடம் பிளவட்ஸ்கி, கர்னல் ஆல்காட்
5. இராமகிருஷ்ண இயக்கம் - விவேகானந்தர்
a) 1, 4, 5 மட்டும் b) 2, 3, 4 மட்டும்

c) அனைத்தும் d) எதுவுமில்லை

119. தவறான இணை எது?
1. பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய ஆண்டு - 1925
2. பெரியாரின் தமிழ் ஏடுகள் குடியரசு, புரட்சி, விடுதலை
3. ஈ.வே.ரா.வுக்கு பெரியார் பட்டம் வழங்கப்பட்ட ஆண்டு - 1938
4. தந்தை பெரியாருக்கு யுனெஸ்கோ நிறுவனம் தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்ற பட்டம் வழங்கிய ஆண்டு - 1970
a) 1, 4 மட்டும் b) 2, 3 மட்டும்
c) அனைத்தும் d) எதுவுமில்லை

120. சரியான இணை எது?
1. வேதகங்களுக்கு திரும்புங்கள் என்றவர் - தயானந்த சரஸ்வதி
2. சுத்திய இயக்கம் - சுவாமி தயானந்த சரஸ்வதி
3. சத்யார்த்த பிரகாஷ் - சுவாமி தயானந்த சரஸ்வதி
4. தயானந்த சரஸ்வதி பிறந்த இடம் குஜராத் சத்தியவார் பகுதி
a) 1, 2, 3 மட்டும் b) 3, 4 மட்டும்
c) 1, 2, 4 மட்டும் d) அனைத்தும்

121. வேலூர் கலகத்திற்கு காரணம் எது?
a) வாரிசு இழக்கும் கொள்கை
b) கப்பம் வசூலித்தல்
c) புதிய ஆயுதம், சீருடை அறிமுகம்
d) பொருளாதாரக் காரணம்

122. விதவை மறுமணச்சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள்?
a) ஜுலை 13, 1856 b) ஜுலை 15, 1856 c) ஜுலை 12. 1856 d) ஜுலை 14, 1856

123. மக்கள் தொகை அடர்த்தி என்பது?
a) நிலத்தின் அளவு / மக்கள் தொகை
b) நிலத்தின் அளவு / வேலைவாய்ப்பு
c) மக்கள் தொகை / குறிப்பிட்ட நிலஅளவு
d) மக்கள் தொகை / வேலைவாய்ப்பு

124. இரயத்வாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப் -பட்ட இடம்?
a) கேரளா b) வங்காளம்
c) தமிழ்நாடு d) மகாராஷ்டிரா

125. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டகாலம்?
a) 1992-1997 b) 2002-2007
c) 2007-2012 d) 1997-2002

126. சரியான கூற்று எது?
1. 73-வது சட்டதிருத்தம் 1992 அமலுக்கு வந்த நாள் 24 ஏப்ரல் 1993.
2. 74-வது சட்டதிருத்தம் 1992 அமலுக்கு வந்த நாள் 1 ஜுன் 1993.
3. 73-வது சட்டதிருத்தப்படி மத்தியப்பிரதேசம் உள்ளாட்சி தேர்தலை நடத்திய நாள் 30 மே 1994.
4. அசோக் மேத்தா குழு நியமிக்கப்பட்ட நாள் 12, டிசம்பர் 1977.
a) 1, 2 மட்டும் b) 3, 4 மட்டும்
c) 1, 2, 4 மட்டும் d) அனைத்தும்

126. அசோக் மேத்தா குழு பரிந்துரைத்த பரிந்துரைகள் மொத்தம் எத்தனை?
a) 100 b) 120 c) 132 d) 144

127. உச்சநீதிமன்றம் ஏற்படுத்தப்பட்ட நாள்?
a) 28 ஜனவரி, 1950 b) 26 ஜனவரி, 1950
c) 15 ஆகஸ்ட் 1947 d) 26 நவம்பர், 1949

128. பொருத்துக
a) குறுகிய கால விவாதம் - 1. 1964
b) கவன ஈர்ப்பு தீர்மானம் - 2. 1962
c) பூஜ்ஜிய நேரம் - 3. 1953
d) பொதுத்துறைக்கான குழு - 4. 1954
a) 3 4 2 1 b) 3 1 4 2
c) 2 4 3 1 d) 1 2 3 4

129. பொருத்துக
a) கட்டளை நீதி பேராணை (Mandamus) - 1. By What Authority
b) ஆட்கொணர்வு மனு (Habeus Corpus) - 2. We Command
c) உரிமை வினா மனு (Quo warranto) - 3. To be certified
d) தடைமாற்று மனு (Certiorary) 4. You may have the body
a) 1 2 4 3 b) 1 2 3 4
c) 1 3 2 4 d) 3 5 1 4

130. இந்தியாவில் முதன் முறையாக எந்த ஆண்டு பட்ஜெட் அறிமுகப்படுத்தப்பட்டது?
a) 1860 b) 1947 c) 1950 d) 1868

131. கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?
1. ராஜ்யசபை பண மசோதாவினை நிராகரிக்கலாம்.
2. ராஜ்யசபை பண மசோதா மீது பரிந்துரைகள் வழங்கலாம்.
3. ராஜ்யசபை பணமசோதாவை நிராகரிக்க முடியாது.
4. ராஜ்யசபை பணமசோதாவை 14 நாட்களுக்குள் லோக்சபைக்கு திருப்பியனுப்ப வேண்டும்.
5. ராஜ்யசபை பணமசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளலாம்.
a) 2, 3, 5 b) 2, 3, 4
c) 1, 2, 5 d) 2, 4

132. பொருத்துக
a) பொது வேலை வாய்ப்புகளில் சம உரிமை - 1. விதி 29
b) சிறுபான்மையினர் உரிமைகள் - 2. விதி 21
c) தனிநபர் சுதந்திர உரிமை - 3. விதி 23
d) சுரண்டலுக்கெதிரான உரிமை - 4. விதி 16

a) 3 4 2 1 b) 4 1 2 3
c) 3 1 4 2 d) 1 2 3 4

133. பொருத்துக
a) அட்டவணை 3 - 1. மேலவையில் இடங்கள் ஒதுக்கீடு
b) அட்டவணை 9 - 2.கட்சித்தாவல் தடைச்சட்டம்
c) அட்டவணை 4 - 3. சில குறிப்பிட்ட சட்டங்களுக்கான வரையறைகள்
d) அட்டவணை 10 - 4. உறுதிமொழிகள், ரகசிய காப்பு பிரமாணங்கள்
a) 4 1 2 3 b) 3 1 4 2
c) 3 4 2 1 d) 1 2 3 4

134. அடிப்படை கடமைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட எந்தக் குழு பரிந்துரைத்தது?
a) ஷா ஷைன் b) ARC
c) சந்தானம் கமிட்டி d) ஸ்வரன்சிங் கமிட்டி

135. இந்தியா ........... உள்ளடக்கியது?
a) 26 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள்
b) 24 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்
c) 27 மாநிலங்கள் மற்றும் 5 யூனியன் பிரதேசங்கள்
d) 28 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்கள்

136. அரசியலமைப்பு 19 திருத்தம் குடிமக்களுக்கு .................. உரிமைகளை வழங்குகிறது?
a) 7 b) 9 c) 6 d) 5

137. ஃபோர்ட்நைட் (Fort Night) என்பது?
a) 21 நாட்கள் b) 14 நாட்கள்
c) 7 நாட்கள் d) 30 நாட்கள்

138. கழுதை திறன்?
a) 250 வாட் b) 736 வாட்
c) 300 வாட் d) 500 வாட்

139. ஒரு ஒளி ஆண்டு என்பது?
a) $9.46 \times 10^{15}$ மீ b) $8.46 \times 10^{15}$ மீ
c) $7.46 \times 10^{15}$ மீ d) எதுவும் இல்லை

140. விசையின் அலகு?
a) பாஸ்கல் b) நியூட்டன்
c) கி.மீ d) மீ$^3$

141. சரியான இணை எது?
1. 1 அடி = 30.4 செ.மீ. 2. 1 மீ = 3.2 அடி
3. 1 அங்குலம் (இன்ச்) - 2.54 செ.மீ 4 . ஒரு மெட்ரிக் டன் = 10 குவிண்டால்
a) 1, 2, 3 b) 2, 3, 4
c) 1, 3, 4 d) அனைத்தும்

142. 1 TMC என்பது?
a) 300 கோடி லிட்டர் b) 3000 கோடி லிட்டர்
c) 30 கோடி லிட்டர்
d) 3 கோடி லிட்டர்

143. மின்னழுத்தத்தின் அலகு?
a) வாட் b) வோல்ட்
c) ஓம் d) பாரட்

144. முடுக்கத்தின் அலகு?
a) மீ/வினாடி b) மீ/வினாடி$^2$
c) மீ.வினாடி d) மீ.வினாடி$^2$

145. துணி துவைக்கும் இயந்திரத்தில் ஆடையை உலர்த்த பயன்படும் விசை?
a) மைய நோக்கு விசை
b) மைய விலக்கு விசை
c) புவிஈர்ப்பு விசை
d) நிலை மின்னியல் விசை

146. வைரத்தின் ஒளிவிலகல் எண்?
a) 1.33 b) 1.5 c) 2.41 d) 1

147. முழு அக எதிரொளிப்புடன் தொடர்புடையவை?
a) வைரம் b) கானல்நீர்
c) ஒளியிழை d) அனைத்தும்

148. ஒரே அணு எண், வெவ்வேறு நிறை எண் கொண்டவை?
a) ஐசோடோன் b) ஐசோபார்
c) ஐசோடோப் d) அனைத்தும்

149. 300-க்கும், 600-க்கும் இடையே 7-ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை ?
a) 40 b) 41 c) 42 d) 43

150. $(1^3+2^3+.............+15^3) - (1+2+3+......+15)=$?
a) 14400 b) 14200
c) 14280 d) 14520

151. $8x^4y^2$, $48x^2y^4$-ன் மீ.பொ.ம (LCM)?
a) $48x^2y^2$ b) $48x^4y^2$
c) $48x^4y^4$ d) $8x^4y^4$

152. ஓர் எண் மற்றும் அதன் தலைகீழி ஆகியவற்றின் வித்தியாசம் 24/5 எனில், அந்த எண்கள்?
a) 5, 1/5 b) 4, 1/4
c) 7, 1/7 d) 5, -5

153. ஒரு மனிதன் 18 மீ கிழக்கே சென்று பின்னர் 24 மீ வடக்கே செல்கிறான். தொடக்க நிலையிலிருந்து அவர் இருக்கும் தொலைவு?
a) 30 மீ b) 40 மீ
c) 50 மீ d) 20 மீ

154. 396, 524, 636 ஆகியவற்றின் மீ.பொ.வ?
a) 4 b) 6
c) 12 d) 24

155. முதல் 10 இயல் எண்களில் மீதியின்றி வகுபடக்கூடிய சிறிய எண்?
a) 2500 b) 2520
c) 2620 d) 3520

156. இன்று செவ்வாய்கிழமை, என்னுடைய அண்ணன் 45 நாட்களுக்கு பிறகு வருவார் எனில் என்னுடைய அண்ணன் எந்த கிழமையில் வருவார்?
a) திங்கள் b) புதன்
c) வியாழன் d) வெள்ளி

157. 3+k, 15-k, 5k+1 என்ற கூட்டுத்தொடரில் ‘k’-ன் மதிப்பு?
a) 3 b) 4
c) 2 d) 1

158. ஒரு நெட்டாண்டில் (Leaf Year) 53 சனிக்கிழமைகள் கிடைக்க நிகழ்தகவு?
a) 1/7 b) 2/7
c) 3/7 d) 4/7

159. அதிக ஆற்றல் கொண்ட நிலக்கரி எது?
a) லிக்னைட் b) பீட்
c) பிட்டுமினஸ் d) ஆந்தரசைட்

160. இயற்கை வாயுவில் ............... % மீத்தேன் உள்ளது?
a) 60 b) 70
c) 90 d) 75

161. பெரிஸ்கோப், கலைடாஸ்கோப் போன்றவற்றில் பயன்படும் தத்துவம்?
a) முழுஅக எதிரொளிப்பு
b) பன்முக எதிரொளிப்பு
c) ஒளிவிலகல்
d) எதுவும் இல்லை

162. இந்தியாவின் கிராண்ட் டிரங்க் சாலையின் நீளம்?
a) 3000 கி.மீ. b) 2000 கி.மீ.
c) 2500 கி.மீ. d) 1000 கி.மீ.

163. சாலைப் போக்குவரத்து சட்ட திட்டங்கள் அமலுக்கு வந்த ஆண்டு?
a) 1989 b) 1990 c) 1988 d) 1991

164. மிகச்சிறிய இயல் எண்ணிற்கும், மிகச்சிறிய முழு எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம்?
a) 1 b) 0
c) -1 d) -2

165. பின்வரும் கோவைகளில் எது பூச்சியமல்ல?
a) 0x0 b) 0+0
c) 2/0 d) 0/2

166. என்னுடைய பணம் பெறும் அட்டையின் (ATM) கடவு சொல் 9, 4, 6 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்டுள்ளது. இது மிகச்சிறிய 4 இலக்க இரட்டை எண் ஆகும். எனது பணம் பெறும் அட்டையின் (ATM) கடவு சொல் எது?
a) 4698 b) 4968
c) 4896 d) 9864

167. கண்மூடித்தனமாக ஓட்டுவதாலும், ஓட்டுனரின் அலட்சியம் காரணமாகவும் ஏற்படும் இழப்பு தொடர்பான குற்றங்களுக்கு ஓட்டுநர் மீது காவல்துறை எந்தப் பிரிவின் கீழ் குற்ற வழக்கு பதிகிறது?
a) 304 A b) 305 A
c) 306 A d) 301 A

168. லென்சின் திறனின் அலகு டயாப்டர் எவ்வாறு குறிப்பிடுகிறது?
a) T b) D
c) d d) t

169. படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



a) 10 b) 5
c) 12 d) 14

170. ‘தான்சானியா’ எந்த கண்டத்தில் உள்ளது?
a) ஆசியா b) ஆப்பிரிக்கா
c) அமெரிக்கா d) ஐரோப்பா

171. ஹரப்பாவிற்கும், மொகஞ்சதாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் உள்ளன என்பதை கண்டறிந்தவர்?
a) ஜான்மார்ஷல்
b) அலெக்சாண்டர் கன்னிங்ஹோம்
c) சார்லஸ் மேசன்
d) எதுவுமில்லை

172. மனிதர்களால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட உலோகம்?
a) இரும்பு b) செம்பு
c) அலுமினியம் d) தங்கம்

173. ‘தொண்டைநாடு’?
a) சோறுடைத்து b) முத்துடைத்து
c) வேழமுடைத்து d) சான்றோருடைத்து

174. ‘ஏரிகள் மாவட்டம்’?
a) செங்கல்பட்டு b) காஞ்சிபுரம்
c) சென்னை d) மதுரை

175. ‘உருளும் கோள்’ எது?
a) யுரேனஸ் b) நெப்டியூன்
c) சனி d) புதன்

176. உலக வாழிட நாள் அனுசரிக்கப்படுவது?
a) திங்கட்கிழமை b) செவ்வாய்கிழமை
c) புதன்கிழமை d) வெள்ளிக்கிழமை

177. இந்தியாவின் மிக நீளமான நதிகரையான கங்கையின் நீளம்?
a) 6650 கி.மீ b) 2500 கி.மீ
c) 2525 கி.மீ d) 3000 கி.மீ

178. ‘வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு’ இவற்றிற்கு

கொடுக்கப்படும் கரைசல்?
a) ORS b) RSO
c) SOR d) அனைத்தும்

179. வைரஸ் நோய் எது?
a) டைபாய்டு b) டெட்டனஸ்
c) தட்டம்மை d) காலரா

180. பாக்டீரியா ஒரு சிறிய ............ நுண்ணுயிரி?
a) புரோகேரியாட்டிக்
b) யூகேரியாட்டிக்
c) புரோட்டோசோவா
d) செல்களற்ற

181. முதல் கணினி அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு?
a) 1980 b) 1947
c) 1946 d) 1985

182. 'The Search for the India's Lost emperor' என்ற நூலின் ஆசிரியர்?
a) அசோகர் b) சார்லஸ் ஆலன்
c) பிளினி d) ஹெரோடோஸ்

183. தவறான இணை எது?
a) தாமிரம் - cu b) வெள்ளி - Ag
c) டங்ஸ்டன் - Sb d) தங்கம் - Au

184. பாகுநிலையின் அலகு?
a) $Nm^2$ b) பாஸ்கல்
c) $Kgms^{-1}$ d) அலகு இல்லை

185. வாகனங்களில் உள்ள Break அமைப்பு எந்த விதியின் அடிப்படையில் செயல்படுகிறது?
a) பெர்னாலியஸ் b) பாயில்
c) பாஸ்கல் d) நியூட்டன்

186. இரு சொற் பெயரிடு முறை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
a) 1970 b) 1975
c) 1978 d) 1623

187. 'நுண் செயலி' என்பது கணினியின் ............... தலைமுறை?
a) முதல் தலைமுறை
b)இரண்டாம் தலைமுறை
c) மூன்றாம் தலைமுறை
d) நான்காம் தலைமுறை

188. உலகத்திலேயே மிகப்பெரிய உயர் தாவர தொகுப்பு அருங்காட்சியகம் எங்குள்ளது?
a) இந்தியா b) பிரான்ஸ்
c) ரஷ்யா d) அமெரிக்கா

189. தவறான இணை எது?
a) அடையாறு போர் - 1748
b) ஆம்பூர் போர் - 1749
c) வந்தவாசி போர் - 1760
d) ஆற்காட்டு போர் - 1752

190. 'உலக மண் நாள்'?
a) ஆகஸ்ட் 15 b) ஜனவரி 2
c) அக்டோபர் 15 d) டிசம்பர் 5

191. ஐசோகெல் (Isohel) எனப்படுவது?
a) சமமழை கோடு
b) சம காற்று கோடு
c) சம சூரிய வெளிச்ச கோடு
d) சம வெப்ப கோடு

192. மனித குடலில் வாழும் எ.கோலை பாக்டீரியம் உற்பத்தி செய்யும் விட்டமின்கள்?
a) B, K b) A, D
c) C, D d) D, E

193. இந்திய தேசிய ஆவண காப்பகத்தின் தந்தை?
a) ஆனந்தரங்கம்
b) ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட்
c) எட்வர்டு
d) எதுவுமில்லை

194. நவீன இந்தியாவின் முதல் நாணயம் வெளியிடப்பட்ட ஆண்டு?
a) 1935 b) 1862
c) 1950 d) 1947

195. மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி?
a) சர் திருவாரூர் முத்துச்சாமி
b) சர் எலிஜா இம்பே
c) காந்திஜி d) நேருஜி

195. மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி?
a) சர் திருவாரூர் முத்துச்சாமி
b) சர் எலிஜா இம்பே
c) காந்திஜி d) நேருஜி

196. $x^2 - 16/x^2+8x+16=?$
a) $x - 4/ x + 4$ b) $x + 4/ x - 4$
c) $x - 4/ x - 4$ d) $x + 4/ x + 4$

197. 2024 மக்களவை தேர்தலோடு எத்தனை இந்திய மாநிலங்களில் சட்டசபை தேர்தலை சந்தித்தன?
a) 3 b) 4 c) 5 d) 6

198. தந்தையின் வயது மகனின் வயதைப் போல் 6 மடங்கு, 6 வருடங்களுக்குப் பிறகு தந்தையின் வயது மகனின் வயதைப் போல் 4 மடங்கு அதிகம் எனில் தந்தை, மகன் வயதுகள் என்ன?
a) 54, 9 b) 9, 54
c) 7, 49 d) 49, 7

199. 'இயற்கணிதத்தின் தந்தை' எனப்படுபவர்?
a) அல்க்வாரிஸ்மி b) இராமானுஜர்
c) பிதாகரஸ் d) நிக்கோலோ

200. ஒரு கூட்டுத்தொடரின் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4. இந்த கூட்டுத்தொடரின் வரிசையில் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் கூடுதல் 120 கிடைக்கும்?
a) 6 b) 7 c) 8 d) 9

## ஹலோ GROUP - IV தேர்வு எழுதப் போறீங்களா?
## ப்ளீஸ் ! இத முதலில் படியுங்க ! பிறகு தேர்வை எழுதுங்க!

# ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையத்தின் 'டிப்ஸ்'

- நீங்கள் உங்கள் சென்டருக்குத்தான் தேர்வு எழுத சென்றுள்ளீரா என்பதை உறுதி செய்திடுக!
- விடைத்தாளை பெற்றவுடன் தேர்வு குழுமம் உங்களுக்கு கொடுத்துள்ள தேர்வு எண்ணை (Register Number) பிழையின்றி குறித்திடுக!
- வினாத்தாளில் உள்ள Booklet Series-ஐ முறையாக எழுதிடுக!
- GROUP - IV தேர்வு வினாக்கள் 200-ம் எளிமையாகவும், உமக்கு நன்கு தெரிந்ததாகவும் இருக்கும் என்று மனதில் எண்ணிடுக.
- ஒவ்வொரு வினாவையும் முழுமையாக படித்த பிறகு விடைகளை குறித்திடுக!
- வினாக்களுக்கு உரிய விடைகளை விடைத்தாளில் எண் வரிசை மாறாமல் எழுதிடுக!
- நன்கு தெரிந்த வினாக்களுக்கு தவறான பதில் அளிப்பதை தவிர்த்திடுக!
- காலியிடங்களை பற்றியும், இவ்வளவு போட்டியா? என்று எண்ணாமல் வெற்றி ஒன்றை மட்டும் மனதில் நிறுத்திடுக!
- A, B, C, D ஆகிய நான்கில் உங்களுக்கு மனதில் எது முதலில் தோன்றுகிறதா அதை குறித்திடுக!
- திறனறிவில் விடையளிக்க முடியாத கணிதமாக இருப்பின் விடை 1 என குறித்திடுக!
- தெரியாத வினாக்களில் Lengthy Answers இருந்தால் அதை குறித்திடுக!
- கூற்று காரணம் வினாக்களில் பெரும்பாலும் கூற்றுக்கான காரணம் சரியாகவே இருக்கும் என்பதை மனதில் நிறுத்திடுக!
- தெரியாத வினாக்களுக்கு A, B, C, D இதில் ஏதாவது ஒன்றை மட்டும் அனைத்து வினாவிற்கும் குறித்திடுக !
- போட்டித்தேர்வில் உண்மையான போட்டி 50,000-க்குள் தான் இருக்கும் என்பதை நினைவில் வைத்திடுக (10000 - பேருக்குள் வந்திடுக)
- உன்னை வெல்வதற்கு உன்னால் மட்டுமே முடியும் என்பதை மனதில் வைத்திடுக!
- தமிழ் (105), திறனறிவு (25), அரசியலமைப்பு (10), வரலாறு (15), தமிழர் பண்பாடு (20), புவியியல் (5), பொருளாதாரம் (5), நடப்பு நிகழ்வுகள் (5),

**இவைகளில் 170 விடைகளை தவறின்றி குறித்தால்**
**GROUP - IV தேர்வில் வெற்றி உன் கையில் !**
**என்பதை உள்வாங்கிடுக !!!**
**தேர்வில் வெற்றிபெற வாழ்த்துகிறோம்!**

இவண்,

## ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்
பஸ் நிறுத்தம் :
**காவல்நிலையம், நந்தவனம் மரத்தடி, பழைய ஆயக்குடி.**